திருவள்ளூர் மத்திய மாவட்ட

# தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர. ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள். அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் இன்று (28-02-2026 சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு, ஆவடி காவல் ஆணையர் அலுவலகம் எதிரில் அமைந்துள்ள கோல்டன் கிறிஸ்ட் ஹாலில் மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ். தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ. சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், கு.விமல்வர்ஷன், எம். முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனாசுதாகர். எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1 கழகத் தலைவர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா

மார்ச் 9 திருச்சியில் நடைபெறும் கழக மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து

2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து

கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவினை

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், ஊராட்சி, வட்டம், வார்டு, கிளை, பூத் வாரியாக நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாட வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



மார்ச்-1 தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை, கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், கடலூர், புவனகிரி ஆகிய ஐந்து தொகுதிகளிலும் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி, வட்டம், வார்டு, கிளை, 1429 பூத்வாரியாக, பொதுமக்களுக்கு இனிப்புகள், நலத்திட்ட உதவிகள், பள்ளி மாணவ, மாணவியருக்கு உபகரணங்கள் வழங்கி, மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், மரக்கன்று நடுதல், விளையாட்டு போட்டிகள், மகளிர் கோலப் போட்டிகள் நடத்தி, சிறப்பாக கொண்டாடிட வேண்டும். அதுசமயம் சம்பந்தபட்ட இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர், பூத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்டதி.மு.க.

திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, 74வது வட்டத்தில்

# வீடுவீடாகச் சென்று ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை’!

## ‘திராவிட மாடல் அரசின்’ சாதனைகளை மேயர் பிரியா எடுத்துரைத்தார்!

சென்னை, பிப்.28-

பெண்களின் உரிமைகளை உறுதி செய்த திராவிட மாடல் அரசு, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழக மகளிரணி சார்பில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் தேர்தல் பரப்புரையானது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் அனைத்து வீடுகளுக்கும் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள் நேரடியாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் திட்டங்களை மகளீர்களுக்கு எடுத்துரைத்து பரப்புரை செய்து வருகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 74வது வட்டத்தில் தலைமை கழக செயற்குழு உறுப்பினர்/மேயர் “வெல்லும் தமிழ் பெண்கள்” பரப்புரையை 74அ வட்டத்தில் பாகம் 46,47 ஆதிசேஷன் நகர் 1 முதல் 6 தெருக்களில் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று கழக தலைவர் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கியும், இல்லத்தில் உள்ள பெண் வாக்காளர்களிடம் தமிழக அரசின் திட்டங்கள் மூலம் பயன் பெற்று வருவது குறித்தும் கேட்டறிந்தும் பரப்புரை மேற்கொண்டார்.

மேயர் - ஸ்டாலினின் மகளிர் படையினர் பரப்புரையின் போது, திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் மட்டுமல்லாது, பெண்களின் சம வாய்ப்பு, சம உரிமைக்கும், முன்னேற்றத்திற்கும் திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகளையும் பட்டியலிட்டு குறிப்பாக மகளிர்களுக்கு விடியல் பயணம் திட்டத்தின் கீழ் கட்டணமில்லாப் பயணம், அரசுப் பள்ளியில் பயின்று உயர்க்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூபாய் 1,000/ வழங்கும் புதுமைப் பெண் திட்டம், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் தோறும் ரூபாய் 1,000/வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், கோடை காலத்தில் மகளிருக்கு ஆண்டு தோறும் ரூபாய் 2,000/சிறப்பு நிதி வழங்கும் புதிய திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பெண்களுக்கு எடுத்துரைத்தார்.

அரசுப் பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 40% ஆக அதிகரிக்கப்பட்டது. உள்ளாட்சியில் பெண்களுக்கான 50% இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தியது, பெண்கள் வாங்கும் பத்து இலட்சம் வரையிலான சொத்துக்கு 1% பத்திரப்பதிவு கட்டணவிலக்கு, பெண் ஓதுவார்கள் நியமனம் என பல்வேறு புதிய முன்னெடுப்புகளை திராவிட மாடல் அரசு மேற்கொண்டு மகளிருக்கான அரசியல், அதிகாரத்தையும், நியாயமான உரிமைகளையும் உறுதி செய்துள்ளது, போன்ற சமூக நீதி திட்டங்களையும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரையின் போது, ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பெண்களுக்கு விளக்கப்பட்டது.

மேலும், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான 50% இட ஒதுக்கீட்டினை திராவிட மாடல் அரசு செயல்படுத்தியதன் மூலம் 11 பெண்கள் முதன்முறையாக அரசியல் அதிகாரமிக்க மேயர் பதிவியினை தற்போது பெற்றுள்ளனர். அதேபோல கவுன்சிலர்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கான அரசியல் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளதையும் சென்னையின் முதல் பெண் மேயரான திருமதி பிரியா ராஜன், வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பரப்புரைச் செய்தார்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரையின்போது, மேயர், வீட்டு மகளிர்களோடு இயல்பாக அமர்ந்தும், அவர்களின் வேலைகளைப் பகிர்ந்து கொண்டும் பரப்புரை மாண்புமிகு மேற்கொண்டனர்

இந்நிகழ்வில் 74அ வட்டக் கழக செயலாளர் ஜி. கிருஷ்ணகுமார், வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரைக்கான மகளிர் படைகள் உடனிருந்தனர்.

முதல்வர் பிறந்த நாள்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.வி.வேலு தலைமை!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் மகளிருக்கான ஐவர் கால்பந்தாட்ட போட்டி!

## நடிகர்கள் நிழல்கள் ரவி – அசோக் செல்வன் – இந்திய வீராங்கனை பி.மாரியம்மாள் பரிசுகள் வழங்குகின்றனர்!

சென்னை, பிப். 28 -

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா-2026 மனிதநேயம் - 22 காலத்தை வெல்லும் காலாட்படை! கழகத் தலைவரின் சொல்லே விடை! மகளிருக்கான ஐவர் கால்பந்தாட்ட போட்டி இன்று (28.2.2026 - சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு எழும்பூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் - முன்னாள் தமிழ்நாடு கால்பந்தாட்ட வீரர் டி.வி.வேலு தலைமை வகிக்கிறார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் - தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் - சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி., வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், பா. ஸ்ரீராமுலு, பரிதிஇளம்சுருதி, வே.உமாகாந்த், எஸ்.மணிமுடி , ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில்விஜய், அ.நிர்மலாதேவி, கோ.மணி, ஃபாத்திமா முசாஃபர் ம.அசோக் குமார், எஸ்.ரசூல், எம். மலர்மாறன், கே.அன்ன பூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர். பாபு (எ) சந்திரசேகர், வி.விஜயகுமார், எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் திரைக் கலைஞர்கள் நிழல்கள் ரவி, அசோக் செல்வன், சீனியர் இந்திய கால்பந்தாட்ட வீராங்கனை பி. மாரியம்மாள் ஆகியோர் பங்கேற்று பரிசுகள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

இதில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.எம்.யாழினி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.


நான்காம் ஆண்டு

# நினைவு அஞ்சலி

வடவூர். **ப.பழனிவேல்** அவர்கள்

நாகை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்

—— நினைவு நாள் : 28.02.2026 ——

தோற்றம் : 02.09.1940 | மறைவு : 28.02.2022



நீங்கள் காட்டிய கலைஞரின் பாதையில்
கழகத்தலைவரின் வழியில்
சின்னவர் அவர்தம் கரம்பற்றி
தொடர்ந்து பயணிப்போம் !

*என்றும் உங்கள் நினைவில்*

**வடவூர். க.ராஜேந்திரன்**

ஒன்றிய கழக செயலாளர்
தலைமை செயற்குழு உறுப்பினர்,

DHARUN Digital

# நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க